**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 71/2020**
**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர். தங்கச்சாமி | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | பழியன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 01st, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது, கடந்த 11.11.2017 அன்று காலை 09.20 மணியளவில் சரவணக்குமார் என்பவர் கையில் இரத்தக்காயத்துடன் வந்தார். அவரை விசாரித்தபோது, பூசைத்துரை என்பவர் அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் கருப்பாநதி ரோடு, திரிகூடாபுரம் சுடுகாட்டில் வைத்து அரிவாளால் தன்னை வலது மணிக்கட்டில் வெட்டியதாக சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்தபோது,

(1). அவருடைய வலது மணிக்கட்டு Joint-ல் 8 x 2 x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). அவருடைய வலது முன்கையில் மெட்டா கார்பல்போன், அல்னா எலும்பு முறிந்திருந்தது.

அவரை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர், அங்கு செல்லாமல் சுஸ்ருஷா மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டார். சுஸ்ருஷா மருத்துவமனை சிகிச்சை குறிப்புகளின் படி அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் என சான்று வழங்கினேன். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும். நான் பார்த்த காயம் அரிவாளால் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.01 18:54:52 +0530